மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : CC 317/23

பெயர் : அய்யாபிள்ளை (PW4)

த/பெ. : செல்லையா

வயது :

கிராமம் :

தாலுகா :

Calling :

(Accused Kuttiraj is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10 th day of September 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் ஜம்புலிங்கபுரத்தில் வசிக்கிறேன்.நான் பெட்டிக் கடை வைத்துள்ளேன்.சாட்சி அன்னபூர்ணம் என் மனைவி.என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

2)தேதி மாதம் நினைவில்லை.கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காலை 7 மணியளவில் கடை திறந்து கொண்டிருந்தேன் அப்போது புதியம்புத்தூர் போலிசார் அங்கு வந்து குட்டிராஜின் வீட்டை படம் வரைந்து எழுதி என்னிடமும் என் மனைவியிடமும் கையெழுத்து வாங்கினார்கள்..**(மேற்படி பார்வை மகசர் அ.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1)எனக்கு ஜம்புலிங்கபுரம் என்றால் சரிதான்.எதிரி குட்டிராஜ் மற்றும் புகார்தாரர் பெருமாள் சாமியும் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான்.அவர்களின் வீடுகளை பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான்.பெருமாள் சாமியின் வீடு சாய்ப்பு வீடு என்றால் சரிதான்.மேற்படி வீட்டில் ஏற வேண்டும் என்றால் ஏணி வைத்து கஷ்டப்பட்டு தான் ஏற வேண்டும் என்றால் சரிதான்.பெருமாள் சாமியின் வீடு ஆஷ்பெஸ்டாஸ் ஆன சரிவான வீடு என்றால் சரிதான்.அந்த வீட்டில் ஓடி பிடித்து விளையாடவோ , நடக்கவோ முடியாது என்றால் சரிதான்.

2)நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.என் மனைவியும் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.என்ன காரணத்திற்காக சண்டை நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/— ப.சுமதி
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.